# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, தருமபுரி.

ந.க.எண்.046/2020/ஏ4 நாள். 11.05. 2020

## சுற்றறிக்கை -3 (கோவிட் -19)

பொருள் கடன்கள் - மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு "கோவிட் - 19 சிறப்பு கடனுதவி திட்டத்தின் கீழ் கடன்கள் " வழங்க ஏதுவாக இக்கடனுக்கான விதிமுறைகள் மற்றும் கிளை /கள மேலாளரின் பரிசீலனைக் குறிப்பு குறித்த விவரங்களை அனுப்பி வைத்தல் - தொடர்பாக.

பார்வை பதிவாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.19120/2020/மவகொ1 நாள். 08.05.2020.

--------

பார்வை 1-ல் காணும் பதிவாளர் அவர்களின் கடிதத்தில், தற்போது, கோவிட் 19 ஆல் பல்வேறு தரப்பட்ட மக்கள் பாதிப்புக்கப்பட்டுள்ளதால், இவர்களின் கடன் தேவையை குறிப்பாக, மகளிர் சுயஉதவிக் குழுக்களின் அவசர தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு கோவிட் 19 சிறப்பு கடனுதவி திட்டம் என்ற புதிய கடன் பொருள் (New Loan Product) உருவாக்கி மத்திய கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நமது வங்கியின் தலைமையகம் உட்பட அனைத்து கிளைகள் / வங்கியின் விவகார எல்லைக்குட்பட்ட அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் இக்கடன்களை வழங்க ஏதுவாக இக்கடனுக்கான விண்ணப்பங்களை வங்கியின் அனுமதிக்கு அனுப்பும்போது. அனுப்ப வேண்டிய விவரங்கள் குறித்த சரிபார்ப்பு பட்டியல் மற்றும் இக்கடனுக்கான விதிமுறைகள் குறித்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே இத்துடன் இணைக்கப்பட்டுள்ளவாறு கிளை மேலாளர்கள் /தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் சரிபார்ப்பு பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள், ஏற்கனவே மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் வழங்கும்போது பெறப்படும் அனைத்து கடன் விண்ணப்பங்களையும் (இணைப்புகள் உட்பட) பெற்று அவற்றை விடுதலின்றி முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை சரிபார்த்தும், இக்கடனுக்கான விதிமுறைகளுக்குட்பட்டும் கடன் விண்ணப்பங்கள் தயார் செய்து வங்கிக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து கிளை மேலாளர்கள் / தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு -மேற்கண்டவாறு, ஒம்/- கி. ரேணுகா

இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

பெறுதல்,

1. அனைத்து கிளை மேலாளர்கள் , 2. அனைத்து கள மேலாளர்கள்.
3. அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் (கள மேலாளர் வழியாக).
4. கபச, பிரிவு (ஏ4) - கணினி பிரிவு மூலம் உரிய New Loan Product ஏற்படுத்த வேண்டி

நகல்,

1. தலைமையக அனைத்து பிரிவு மேலாளர்கள் / உதவி பொதுமேலாளர்கள்.
2. உட்பரிசோதகர், தருமபுரி / கிருஷ்ணகிரி.
3. ஆய்வுக்குழு,
4. சரக துணைப்பதிவாளர், தருமபுரி /கிருஷ்ணகிரி / ஓசூர்.
5. மண்டல இணைப்பதிவாளர், தருமபுரி / கிருஷ்ணகிரி.
6. தலைவர், இணைப்பதிவாளர் /மேலாண்மை இயக்குநர், துணைப்பதிவாளர் /முதன்மை வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் - மேசைக்கு.

11/5/2020

/உண்மை நகல்/ உதவி பொதுமேலாளர் (கபச)

11/05/2020